**மாதிரிவினாத்தாள் - 2023 - 24**

**SAMPLE QUESTION PAPER -2023 -24**

**வகுப்பு: பன்னிரண்டு** **மொத்த மதிப்பெண்கள்:80**

**(XII-STD)** **Maximum Marks: 80**

**தமிழ்** **காலஅளவு : 3 மணி**

**TAMIL : 106** **Time Allowed : 3 Hours**

---

- **இந்த வினாத்தாளில் அச்சிடப்பட்ட 10 பக்கங்கள் உள்ளதைச் சரி பார்க்கவும்**
- **இந்த வினாத்தாளில் 15 வினாக்கள் உள்ளனவா எனச் சரிபார்க்கவும்**
- **எழுதத் தொடங்குவதற்கு முன் வினாவரிசை எண்ணைக் குறிப்பிடவும்**
- **Please check that this question paper contains 10 printed pages**
- **Please check that this question paper contains 15 part of the questions**
- **Please write down the serial number of the question before attempting it.**

---

## பகுதி அ (படித்தல் -10 மதிப்பெண்)

## Section –A Unseen passage (10 Marks)

1. **<u>பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு விடைதருக</u>.** **5x1=5**

கருப்புப் பெட்டி என்பது விமானம் பறக்கும் போது தகவல் சேமிக்கும் தொழில்நுட்பக் கருவி. இந்தத் தொழில்நுட்பக் கருவி டைட்டானியம் என்ற தனிமத்தால் செய்யப்பட்டது. விமானம் விபத்துக்குள்ளான பின் கருப்புப் பெட்டியிலிருந்து 30 நாட்களுக்குச் சமிக்ஞைகள் வந்து கொண்டிருக்கும். தண்ணீரில் விழுந்தாலும் தீயில் கருகினாலும் கருப்புப்பெட்டியில் பதிவாகியுள்ள தகவல்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது. இது கருப்புப்பெட்டி எனப்பட்டாலும் அது கருப்பு நிறத்தில் இருப்பதில்லை. இளஞ்சிவப்பு அல்லது சிவப்பு நிறத்தில் இருக்கும். கருப்புப் பெட்டியில் இரண்டு பகுதிகள் உண்டு. ஒன்று விமானியின் குரல் பதிவு செய்யப்படும் பகுதி. இதில் விமானத்தின் வேகம், பறக்கும் உயரம், இயந்திரச் சத்தம் போன்றவை பதிவாகும். மற்றொரு பகுதி

விபத்திற்கு முந்தைய கடைசி இரண்டு மணி நேரத்தில் விமானி கட்டுப்பாட்டு அறையுடன் நடத்தும் உரையாடல் பதிவு செய்யப்பட்டிருக்கும் பகுதி. இதை உருவாக்கியவர் டேவிட் வாரன். ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தவர். இவரது தந்தை ஒரு விமான விஞ்ஞானி. 1934 இல் நடந்த ஒரு விமான விபத்தில் பலியானார். அந்த விமானத்தின் விபத்துக்கான காரணத்தைக் கண்டறிய முடியவில்லை. அப்போதுதான் கருப்புப் பெட்டியின் தேவை குறித்து முடிவு செய்தார் வாரன். அதன் விளைவாக 1956 இல் கருப்புப் பெட்டியை உருவாக்கினார். உலகிலேயே முதன் முதலாக விமானத்தில் கருப்புப் பெட்டி பொருத்துவதைக் கட்டாயமாக்கிய நாடு ஆஸ்திரேலியா.

**வினாக்கள்** :

I. கட்டுப்பாட்டு அறையுடன் உரையாடுபவர் யார்?

A. அதிகாரி B. அமைச்சர் C. விமானி D. ஆலோசகர்

II ஆஸ்திரேலியா எதனைக் கட்டாயமாக்கியது?

A. கல்வி B. சேமிப்பு C. கருப்புப்பெட்டி D. பெட்டி

III. கருப்புப்பெட்டியில் இருக்கும் பகுதிகள்

A. 2 B. 3 C. 4 D 5

IV. டேவிட் வாரனின் தந்தை ஒரு ________________ .

A. விமானி B விஞ்ஞானி C. ஆராய்ச்சியாளர்

D. விமான விஞ்ஞானி

V. டைட்டானியம் என்பது ________________ .

A. தனிமம் B. உலோகம் C. அமிலம் D. உப்பு

2. **<u>பின்வரும் உரைநடைப்பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடை தருக</u>.** **5x1=5**

சங்கப் பாக்களில் அறம் பற்றிய அறிவுரைகள் பெரும்பாலும் அரசர்களை முதன்மைப்படுத்தியே கூறப்பட்டுள்ளன. மன்னர்களுடைய செங்கோலும் வெண்கொற்றக்குடையும் அறத்தின் குறியீடுகளாகப் போற்றப்பட்டன. அரசன் செங்கோல் போன்று நேரிய ஆட்சியை மேற்கொள்ள வேண்டும் என்பது பல பாடல்களில் வலியுறுத்தப்பட்டுள்ளன. நீர்நிலை பெருக்கி நிலவளம் கண்டு உணவுப்பெருக்கம் காண்பதும் அதனை அனைவருக்கும் கிடைக்கச் செய்வதும் அரசனின் கடமையாகச் சொல்லப்பட்டது. குற்றங்களை அறத்தின் அடிப்படையில் ஆராய்ந்து தண்டனை வழங்க வேண்டும் என்கிறார் ஊன் பொதிப் பசுங்குடையார்.

நன்றும் தீதும் ஆய்தலும் அன்பும் அறனும் காத்தலும் அமைச்சர் கடமை என்கிறது மதுரைக்காஞ்சி. தமிழர் பொருள் ஈட்டி அறம் செய்து இன்புற்றனர். உலகே பரிசாகக் கிடைத்தாலும் பழிதரும் செயல்களைச் செய்ய மறுத்தனர். சமயக் கலப்பில்லாத மானிட அறம் இயல்பாக நிலவிய காலம் சங்ககாலம்.

**வினாக்கள்** :

I. குற்றங்களை அறத்தின் அடிப்படையில் ஆராய்ந்து தண்டனை வழங்க வேண்டும் என்று கூறியவர் ?

II. சமயக் கலப்பில்லாத மானிடஅறம் இயல்பாக நிலவியகாலம் எது ?

III. அரசனின் கடமையாகச் சொல்லப்பட்டது எது ?

IV. அன்பும் அறனும் காத்தல் அமைச்சர் கடமை என்று கூறிய நூல் எது?

V. அறத்தின் குறியீடாகப் போற்றப்பட்டது எது ?

## பகுதி -ஆ(இலக்கணம் -12 மதிப்பெண்)
## Section – B ( Grammar-12 Marks)

**3. <u>பிழை நீக்கித் திருத்தப்பட்ட தொடர் எதுவெனக் கண்டறிந்து எழுதுக</u> [ மூன்று மட்டும் ]** **3x1=3**

**I.ஆடையில் அதிகம் அலுக்குப் படிந்து கரை பிடித்துல்லது.**

A. ஆடையில் அதிகம் அளுக்குப் படிந்து கறை பிடித்துல்லது.
B. ஆடையில் அதிகம் அலுக்குப் படிந்து கரை பிடித்துள்ளது.
C. ஆடையில் அதிகம் அழுக்குப் படிந்து கரை பிடித்துள்ளது.
D. ஆடையில் அதிகம் அழுக்குப் படிந்து கறை பிடித்துள்ளது.

**II. நீர் நிலைகளில் பறந்து விரிந்தது பறவை.**

A. நீர் நிலைகளில் பறந்து விரிந்தது பரவை.
B. நீர் நிலைகளில் பரந்து விரிந்தது பரவை.
C. நீர் நிலைகளில் பரந்து விரிந்தது பறவை.
D. நீர் நிலைகளில் பறந்து விரிந்தது பறவை.

**III. பளத்த வலி வீசியதால் வாலி கினற்றினுள் விளுந்தது.**

A. பலத்த வலி வீசியதால் வாலி கிணற்றினுள் விளுந்தது.
B. பளத்த வளி வீசியதால் வாளி கினற்றினுள் விலுந்தது.
C. பலத்த வளி வீசியதால் வாளி கிணற்றினுள் விழுந்தது.
D. பளத்த வலி வீசியதால் வாலி கினற்றினுள் விழுந்தது.

IV. **மறைகளில் புல்லிமான் , களைமான் என பள வகையுண்டு.**

A. மறைகளில் புள்ளிமான் , களைமான் என பல வகையுண்டு.
B. மரைகளில் புல்லிமான் , கலைமான் என பள வகையுண்டு.
C. மறைகளில் புல்லிமான் , கலைமான் என பள வகையுண்டு.
D. மரைகளில் புள்ளிமான் , கலைமான் என பல வகையுண்டு.

V. **மறங்களில் மங்கலகரமானது வாலை மறம்.**

A. மரங்களில் மங்கலகரமானது வாழை மறம்.
B. மரங்களில் மங்களகரமானது வாழை மரம்.
C. மறங்களில் மங்களகரமானது வாலை மரம்.
D. மறங்களில் மங்கலகரமானது வாலை மறம்.

4. **<u>வல்லினமெய்யிட்டுத் திருத்தியதொடர் எதுவெனக் கண்டறிந்து எழுதுக [ மூன்று மட்டும் ]</u>** **3x1=3**

I.**காகத்திற்கு காது உண்டு. அதற்கு காது கேட்கும்.**

A. காகத்திற்க்கு காது உண்டு. அதற்குக் காது கேட்கும்.
B. காகத்திற்கு காது உண்டு. அதற்கு காதுக் கேட்கும்.
C. காகத்திற்க்குக் காது உண்டு. அதற்க்கு காதுக் கேட்கும்.
D. காகத்திற்குக் காது உண்டு. அதற்குக் காது கேட்கும்.

II.**வாய்மையை சிறந்த அறமாக சங்க இலக்கியங்கள் பேசுகின்றன.**

A. வாய்மையைச் சிறந்த அறமாக சங்க இலக்கியங்கள்ப் பேசுகின்றன.
B. வாய்மையைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் பேசுகின்றன.
C. வாய்மையை சிறந்தத் அறமாகச் சங்க இலக்கியங்கள் பேசுகின்றன.
D. வாய்மையை சிறந்தத் அறமாக சங்க இலக்கியங்கள்ப் பேசுகின்றன.

III. **பிறமொழி சொற்களை கலந்து பேசுவதும் எழுதுவதும் தமிழுக்கு கேடு.**

A. பிறமொழிச் சொற்களை கலந்துப் பேசுவதும் எழுதுவதும் தமிழுக்குக் கேடு.
B. பிறமொழிச் சொற்களைக் கலந்து பேசுவதும் எழுதுவதும் தமிழுக்குக் கேடு.
C. பிறமொழி சொற்களைக் கலந்து பேசுவதும் எழுதுவதும்த் தமிழுக்கு கேடு.
D. பிறமொழிச் சொற்களை கலந்து பேசுவதும் எழுதுவதும் தமிழுக்குக் கேடு.

IV. **பெற்றோர்களுக்கு சிறு உதவிகளை செய்வதும் பெற்றோரை மதிப்பதும் மாணவர் கடமையாகும்.**

A. பெற்றோர்களுக்குச் சிறு உதவிகளைச் செய்வதும் பெற்றோரை மதிப்பதும் மாணவர் கடமையாகும்.
B. பெற்றோர்களுக்கு சிறு உதவிகளைச் செய்வதும்ப் பெற்றோரை மதிப்பதும் மாணவர் கடமையாகும்.
C. பெற்றோர்களுக்குக் சிறு உதவிகளை செய்வதும் பெற்றோரை மதிப்பதும் மாணவர்க் கடமையாகும்.
D. பெற்றோர்களுக்கு சிறு உதவிகளை செய்வதும் பெற்றோரை மதிப்பதும் மாணவர் கடமையாகும்.

V. **வரையை குடைந்து செய்யப்பட்டவை குடவரை கோயில்கள்.**

A. வரையை குடைந்து செய்யப்பட்டவைக் குடவரைக் கோயில்கள்.
B. வரையை குடைந்துச் செய்யப்பட்டவை குடவரைக் கோயில்கள்.
C. வரையைக் குடைந்துச் செய்யப்பட்டவை குடவரை கோயில்கள்.
D. வரையைக் குடைந்து செய்யப்பட்டவை குடவரைக் கோயில்கள்

5. <u>எடுத்துக்காட்டு எழுதுக [மூன்று மட்டும்]</u> **3x1=3**

I. **கட்டளைத் தொடர்**.
A. நேற்று மழை பெய்தது.
B. தமிழகத்தின் கல்வியமைச்சர் யார்?
C. சத்தமாகப் படி
D. .ஆஹா! எவ்வளவு அழகான பூங்கா

II. **செயப்பாட்டு வினை வாக்கியம்.**

A. புலி மானை வேட்டையாடியது

B. புலி மானைத்தான் வேட்டையாடியது.

C. மான் புலியால் வேட்டையாடப்பட்டது

D. வேட்டையாடியது மான்

III. **வினா வாக்கியம்.**

A. அறம் பாடினர் தமிழர்.

B. தமிழரின் அறம் எது ?

C. அறம் தான் பாடவேண்டும்.

D. . அறத்தின் சிறப்பறிந்து பாடினர்..

IV. **பிறவினை வாக்கியம்.**

A. .காவலர் திருடனைத் திருத்தினர்

B. . அமைதிஅடைந்தான் திருடன்.

C. .கழுதை அறியுமா கற்பூர வாசனை?

D. . படித்ததில் திருந்தினான்.

V. **எதிர்மறை வாக்கியம்.**

A. ஆசிரியர் பாடத்தைப் படிக்குமாறு கூறினார் .

B. செய்தித்தாள் வாசிக்கவில்லை.

C. கிளி பேசியது; குயில் கூவியது .

D. நான் நாளை சென்னை செல்வேன் "என்று செல்வி கூறினாள்.

**6. வழுவற்ற தொடரைத் தேர்வு செய்து எழுதுக [மூன்று மட்டும்]**

**3x1=3**

I

A. என் மாமா நேற்று வந்தது.

B. என் மாமா நேற்று வந்தார்.

C. என் மாமா நேற்று வந்தான்.

D. என் மாமா நேற்று வரும்.

II.

A. காட்டில் புலி உறுமும்: யானை பிளிறும்.

B. காட்டில் புலி உறுமும்: யானை கத்தும்.

C. காட்டில் புலி கத்தும்: யானை பிளிறும்.

D. காட்டில் புலி முழங்கும்: யானை பிளிறும்.

III.

A. ஒரு அணில் மரத்தில் ஏறின.
B. ஒரு அணில் மரங்களில் ஏறின.
C. ஓர் அணில் மரத்தில் ஏறியது.
D. ஒரு அணில் மரத்தில் ஏறினர்.

IV.

A. நேத்து அடமழ பேஞ்சுது.
B. நேற்று அடமழ பேஞ்சுது.
C. நேற்று அடைமழை பெய்தது.
D. நேற்று அடமழ பெய்தது.

V.

A. அவள் பாடகி அல்லள்.
B. அவள் பாடகி அல்லன்.
C. அவள் பாடகி அல்ல.
D. அவள் பாடகி அன்று.

**பகுதி -இ (இலக்கியம் -31 மதிப்பெண்)**
**Section –C ( Main course book 31 Marks)**

7. **பின்வரும் செய்யுள் அடிகளைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளி**: **(5x1=5)**

**பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்**
**இருங்கழி செறுவின் உழாஅது செய்த**
**வெண் கல் உப்பின் கொள்ளை சாற்றி**
**என்றூழ் விடர் குன்றம் போகும்**
**கதழ் கோல் உமணர் காதல் மடமகள்**
**சில்கோல் எல்வளை தெளிர்ப்ப வீசி**
**நெல்லின் நேரே வெண் கல் உப்பு எனச்**
**சேரி விலைமாறு கூறலின்..**

**வினாக்கள்:**

I. இச்செய்யுள் இடம்பெற்ற நூல் யாது?

A. அகநானூறு B புறநானூறு C ஐங்குறுநூறு D.திருக்குறள்

II. இச்செய்யுள் எத்திணையைச் சார்ந்தது?

A குறிஞ்சி B முல்லை C. மருதம் D. நெய்தல்

III. உமணர் என்பவர் யார்?

A. சமணர் B உப்பு விற்பவர் C. உப்பு D. அமணர்

IV. உப்புக்கு விலை பேசப்பட்டது எது?

A. நெல் B. உப்பளம் C.தங்கம் D. பண்டம்

V. வளையல் ஒளி வீச நடந்து சென்றவர் யார்?

A பெண் B தமக்கை C தலைவன் D தோழி

8. **<u>பின்வரும் பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளி</u>:** **5×1=5**

குடும்ப அமைப்பு ஏற்படுவதற்கு அடிப்படை திருமணமே. குடும்பம், திருமணம் இரண்டும் ஒன்றை ஒன்று சார்ந்து செயல்படுகின்றன நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போல! இன்று நாம் வழங்கும் திருமணம், குடும்பம் ஆகிய இரண்டு சொற்களுமே தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியத்திலும் இடம்பெறவில்லை. குடும்பம் என்னும் சொல் முதன் முதலில் திருக்குறளில் தான் பயின்று வருகிறது. சங்க இலக்கியத்தில் குடம்பை, குடும்பு, கடும்பு ஆகிய சொற்கள் குடும்ப அமைப்போடு தொடர்புடையவை. 'குடம்பை' என்ற சொல் இருபது இடங்களில் பயின்று வருகிறது. குடும்பம் என்ற சொல் 'கூடி வாழ்தல்' என்னும் பொருள்படுகிறது. குடும்பு என்ற சொல்லுடன் 'அம்' விகுதி சேர்த்து குடும்பம் என்ற சொல் அமைந்தது. குடும்பம் என்னும் அமைப்புடன் வாழ்ந்த இடங்கள் பற்றிய பல குறிப்புகள் நமக்குக் கிடைக்கின்றன. தொல்காப்பிய நூற்பா ஒன்று, இல், மனை என இரண்டு வாழிடங்களைக் குறிப்பிடுகிறது.

**வினாக்கள்** :

I.. குடும்பம் என்ற சொல்லின் விகுதி எது?

II. இப்பத்தியில் கூறப்பட்ட இலக்கண நூல் எது?

III. இல், மனை இரண்டும் எதனைக் குறிக்கிறது?

IV. திருமணம் எதற்கு அடிப்படை?

V. குடம்பை என்ற சொல் எத்தனை இடங்களில் வருகிறது?

**9. பின்வரும் செய்யுள் வினாக்களில் எவையேனும் இரண்டனுக்குச் சுருக்கமான விடையளி** **[ 2×3= 6]**

I. 'வெஃகாமை' அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் கருத்துக்களை நும் பாடப்பகுதி வழிநின்று விளக்குக.
II. குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைக் சுட்டிக் காட்டுக.
III. விருந்தினர் எவராயினும் நன்றி செலுத்துக -விளக்குக.
IV. சென்னையில் உள்ள மயிலாப்பூர் கந்த கோட்டப் பகுதிகள் செய்யுளில் எவ்விதம் காட்சிப்படுத்தப்படுகிறது?

**10. பின்வரும் உரைநடை வினாக்களில் எவையேனும் மூன்றனுக்கு விடையளி.** **3×5=15**

I. சங்க காலத்திலேயே ஆண் மையச் சமூக முறை வலுவாக இருந்ததற்குச் சான்று தந்து விளக்குக.
II. வெள்ளச் சமவெளிகள் - குறிப்பு வரைக.
III. சென்னையின் தொன்மையை விளக்குக.
IV. சங்க இலக்கியத்தில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் விளக்குக.
V. மணந்தகம் - விளக்குக

## பகுதி -ஈ (துணைப்பாடம் -12 மதிப்பெண்)
## Section – D ( Non-detail - 12 Marks)

**11. ஏதேனும் ஒன்று குறித்து துணைப்பாடக் கட்டுரை எழுதுக** 1x7=7

I. உரிமைத்தாகம்
II. தலைக்குளம்
III. பாரதியார் கடிதங்கள்

**12. கீழ்காணும் கதைமாந்தரில் ஒருவரின் பண்பு நலனை எழுதுக 1×5=5**

I. மருதன்
II. முத்தையன்

**பகுதி -உ( படைப்புத்திறன் -15 மதிப்பெண்)**

**Section – E ( Creative writing - 15 Marks)**

**13. பின்வரும் தலைப்புகளில் ஒன்று பற்றிக் கடிதம் வரைக. 1×6=6**

I. உன் பள்ளி விழாவிற்கு உன் நண்பனை அழைத்துக் கடிதம் எழுதுக

II. உன் பகுதியில் அமைத்துள்ள பேருந்து நிலையத்திற்கு நிழற்குடை அமைத்துத் தரும்படி மாநகரப் போக்குவரத்துக் கழக ஆணையருக்கு விண்ணப்பக்கடிதம் எழுதுக.

( இரு கடிதங்களுக்கும் உன் முகவரி: **அ.நித்திலா /அ.நித்திலன், 15. பாரி தெரு, அயனம்பாக்கம், சென்னை-95)**

14.. தேசிய விருது பெற்று வாகைசூடிய பாடகரை **நேர்காணல்** செய்க.

**1×3=3**

**15. பின்வரும் தலைப்புகளில் ஒன்று குறித்துக் கட்டுரை எழுதுக.**

**1x6=6**

I. தன்னம்பிக்கை எனும் மூன்றாம் கை.

II. மருத்துவத்துறையில் இந்தியா

III. கல்வியே செல்வம்